**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

O.S No. 258 of 2023

Deposition of P.W.2

Name of the Witness: திரு.நரசிம்மன்

Date : 31.10.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன் என்றால் சரிதான். 3ம் வாதி என்னுடைய மகள். 1, 2 வாதிகள் என்னுடைய பேர பிள்ளைகள். சொத்து வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார்கள். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள். பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. என்னுடைய மகள் 3ம் வாதி தற்போது 2ம் பிரதிவாதியுடன் வாழ்ந்து வருகிறார். வழக்கு போடும் போது என்னுடன் இருந்தார். ஆத்தோரம் நிலங்கள் இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. 1ம் பிரதிவாதி B.D.O அலுவலகத்திற்கு சொத்துக்களை கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதி சொத்துக்களை நாகராஜ் என்பவருக்கு சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரிதான், அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2) சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும் அது சம்பந்தமாக அவர் பொது மக்களின் பயன்பாட்டிற்காக

B.D.O அலுவலகத்திற்கு எழுதி கொடுத்த ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றாலும், சொத்துக்கள் பொது மக்களுக்கு போக கூடாது என்பதற்காக எனது மகளை வைத்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்துக்களை குறித்து ஆவணங்கள் இல்லை என்றாலும், பொய்யாக நானும் எனது மகளும் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி B.D.O அலுவலகத்திற்கு எழுதி கொடுத்த ஆவணங்கள் செல்லாது என்று கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் எனது பேரன்கள், 3ம் வாதி என்னுடைய மகள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் வாதியும், 2ம் பிரதிவாதியும் தற்போது ஒன்றாக தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

இந்த குறுக்கு விசாரணையை 4ம் பிரதிவாதி தரப்பில் ஏற்று கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது.

**<u>5 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவர் அரசாங்கத்தின் பேரில் எழுதி கொடுத்த ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல.